www.tamilarangam.net

# தூண்டில்



சாப்பிடுவதற்காக மட்டும் வாய் திறக்க அனுமதித்தார்கள். இது அநியாயம், அக்கிரமம் என்று சொல்ல வாயைத் திறந்தேன். உடனே 'இனம் தெரியாத நபர்கள்' என்னைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். என்ன அக்கிரம் நடந்தாலும் மௌனமாக இருந்தால் நானும் ஒரு பிரஜை. இப்போதோ தெருவோர அநாதைப் பிணம்.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணின் சிந்தனை

(ஜான்டில் கலம் பதின்மூன்றின் அட்டைப்படத்திற்கான கவிதை)

ஜான்டி (வி:)ல் போட்டிருந்த
ஜாரிகையின் உதவியற்ற - சிறு
காரிகையின் படம் பார்த்தேன்
பன்னிரண்டு ஆன்டுகளில் ஓர் தடவை
பூக்குமாம் குறிஞ்சிப் பூ
இப் பூவும் அப்படியா?
அவள் சார்பில் சில வரிகள் -

சுட்டுவிட்டான் ஒரு கலைஞன்
என்னைப் படமாக
சுட்டுவிட்டான்.
சுட்டிருக்கும் உங்களுக்கும்
என் தலையில் மண் உண்டு
என்பதனால் எந்நாளும்
எனக்கும் உண்டு
'மண்ணின்' சிந்தனை
உங்களுக்கு மட்டும் அல்ல

எனது உடம்பில் அழுக்கும் உண்டு
என்பதனால் எப்போது
அது அழியும் என்கின்ற
கேள்வி என்னில் உண்டு
மனதில் இருளாகி
மனதில் அழுக்காகிப்
போனோரே கூறுங்கள்
எனக்குப் பதில்.

- கருடன்

www.tamilarangam.net

# எது சுதந்திரம்?

வருடா வருடம் பெப்ரவரி நான்காம் திகதி இலங்கையில் 'சுதந்திர தினம்' கொண்டாடப்படுகிறது. இத் திகதியில் சகல காரியாலயங்களுக்கும், திணைக்களங்களுக்கும், அலுவலகங்களுக்கும் விடுமுறை விடப்படுகிறது. பத்திரிகைகளில் அரசியல்வாதிகளின் வாழ்த்துச் செய்திகள் இடம் பிடிக்கின்றன. அரசாங்கச் செலவில் (மக்களைச் சுரண்டிச் சேர்த்த பணத்தில்) பிரம்மாண்டமான கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அப்படியென்ன சுதந்திரம் இலங்கைக்குக் கிடைத்தது? சுதந்திரம் என்றால் என்ன? இலங்கையிலிருக்கும் உழைக்கும் மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா?

இந்தியாவிலிருந்து புறப்படும்போது இலங்கையிலும் அரசு அதிகாரத்தை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒடுக்குமுறையாளர்களிடம் பிரித்தானிய அரசு கொடுத்துவிட்டுச் சென்ற சம்பவமே இன்று அரசாங்கத்தால் கொண்டாடப்படும் சுதந்திர தினமாகும். தன்னிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதற்காக ஆளும் வர்க்கம் நன்றி தெரிவித்து மகிழும் தினமே 'சுதந்திர தினமாக' பாடப் புத்தகங்களிலும், நாட்காட்டிகளிலும், அரச அலுவலகங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இதுதான் சுதந்திரமா?

அந்நிய இராணுவங்களை, உளவுப்படைகளை வேண்டி அழைத்து நாட்டைப் பற்றி முடிவு எடுக்கும் உரிமையை வல்லரசுகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டுத்தான் சுதந்திரம் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் வாழும் தேசிய இனங்கள் அனைத்தும் சுதந்திரமாக வாழுகிறதா? ஜே.வி.பி.யினரை அழிப்பதாகச் சொல்லி அரசு அதிகாரத்தை வைத்திருக்கும் ஐ.தே.கவினால் தோற்றுவிக்கப்பட்ட 'பச்சைப் புலிகள்', 'பிரா' ஆயுதபாணிக் கும்பல்கள் தென்னிலங்கையில் தினமும் பத்து, இருபதென அப்பாவி இளைஞர்களைக் கொன்று பாதையில் போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டு கொடுத்துகின்றன. இவர்களது நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகளாக ஆளும் கட்சி எம்.பிக்களும், ஆதரவாளர்களும், எதிர்கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஜே.வி.பி, தேசப்பிரேமி ஆயுதபாணிக்குழுக்களால் ஒவ்வொருநாளும் அதே எண்ணிக்கையில் கொல்லப்படுகிறார்கள். இது தவிர அரசாங்கமே இராணுவம், பொலிஸ் மூலம் எதிர்கட்சிகளை தாக்கி வருகிறது. இத் தாக்குதல்களை எதிர்கொள்ள எதிர்கட்சிகள் ஆயுதபாணியாகியுள்ளன. இப்படி பல தரப்பட்ட குழுக்கள் தங்கள் நலனுக்காக மோதிக்கொள்வதில் அப்பாவிப் பொதுமக்கள் பலியாவதுதான் சுதந்திரமா?

என்ன கலவரம் நடந்தாலும் சரி தொழிலாளர்கள் தங்கள் கடமைக்குச் சென்றேயாக வேண்டுமென சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இல்லையேல் வேலைநீக்கம், அபராதம் போன்றவற்றுடன் சிறைத்தண்டனையும் அளிக்கப்படுகிறது. வேலைக்குப் போனாலோ தமது கர்த்தாலை மீறிவிட்டதாக ஆயுதமேந்திய இயக்கங்களினால் மரண தண்டனையளிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி உயிருக்கு உத்தரவாதமுமில்லாமல் குடும்பத்தைக் காப்பாற்றவும் முடியாமல் கஷ்டப்படுவதுதான் சுதந்திரமா?

வெளிப்படையான அரசியலில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டால் அரசாங்கத்திற்கெதிரான சதிச் செயல் என்ற பெயரில் அப்பாவி மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் அல்லது 'காணமல் போகிறார்கள்'. காரண, காரியங்கள் விளக்கப்படாமல் பகிஷ்கரிப்பு, கர்த்தால் செய்யும்படி இயக்கங்களினால் மிரட்டப்படுகிறார்கள். பல பாடசாலைகள் இராணுவத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. தமது சுய விருப்பப்படி அரசியல் நடவடிக்கைகளில் இறங்க முடியாமல் இரண்டு பக்கங்களினாலும் மாணவர்கள் மிரட்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைதான் சுதந்திரமா?

உடம்பைத் தவிர வேறெந்த சொத்துமின்றி உழைத்து, உழைத்து தங்கள் வாழ்க்கை வட்டத்தை தேயிலைத் தோட்டத்திற்குள்ளேயே முடித்துக் கொண்டிருக்கிறார்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களைப் பிரதிநிதிப்படுத்துவதாக் கூறி தங்களுடைய வர்க்க நலனைப் பேணும் இ.தொ.க கட்டம் தங்களது பதவிகளைத் தங்க வைத்துக் கொள்வதற்காக காலத்துக்குக் காலம் மலையக மக்களை சுரண்டி ஆட்சி செய்யும் ஒடுக்கும் வர்க்கத்துடன் கூட்டு வைத்து ஒடுக்குமுறை அரசுக்குப் பலம் சேர்த்துக் கொண்டிருக்கிறது. அன்றைய இடதுசாரிகளிலிருந்து இடைப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளாலும் ஏமாற்றப்பட்டு வரும் இந்த உழைப்பாளிகள் அரசுக்கெதிரான போராட்டங்களை ஆரம்பித்து விடாமலிருப்பதற்காகவும், வாக்குத் தேவைக்காகவும் அவ்வப்போது பிரஜா உரிமைபோன்ற சில சலுகைகளால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுரண்டலிலிருந்து தாங்களும் விடுபடாமல், தங்களுடைய பரம்பரையை விடுவிக்கவும்முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாமல் உழைத்துக்கொண்டே உருக்குலையும் இந்த மலையக மக்களின்நிலை தான் சுதந்திரமா?

காலம் காலமாக நசுக்கப்பட்டு வந்த தமிழ் பேசும் சிறுபான்மையின மக்கள் அரசாங்கத்தின் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பதுடன் நின்றுவிடாமல் முழுமையான சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்றுஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ராஜீவ்—ஜே.ஆர் ஒப்பந்தத்தின்பின் புதுவடிவமெடுத்திருக்கிறது.இதன் நடவடிக்கைகளாக ஆயுதமேந்திப் போராடிய விடுதலை இயக்கங்கள் முற்றாகப் பிரிக்கப்பட்டு (முன்பு இந்தியப்படையினால் பிளவுபடுத்தப்பட்டதைவிட) தனிமைப்படுத்தப்பட்டு,ஒன்றுடனொன்று மோதி ஒடுக்கப்பட்ட மக்களின் கவனத்தை திசை மாற்றியுள்ளன.பாசிச வேர்களைக் கிள்ளி எறிவோம்,அரச அடக்குமுறையை உடைத்தெறிவோம் என ஆயுதமேந்திப் போராடிய ஈ.பி.ஆர்.எல்.எவ்,ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ இயக்கத்தவர்கள் தாம் எதிர்த்துப் போராடிய அதே பாசிச, அடக்குமுறை அரசாங்கத்தின் கீழான மாகாணசபையில் அங்கம் வகித்து ஒடுக்கும் அரச சாதனத்தின் பங்காளிகளாகியுள்ளனர்.தற்போது ஈரோஸ், புளொட் கூட தமது பங்களிப்பையும் இதே அரசுக்கு வழங்கத் தயாராகியுள்ளன.இவர்களுடைய இந்த சந்தர்ப்பவாதத்திற்கு சக போராளிகளைக் கொன்ற புலிகளின் அராஜகமும் ஒரு காரணமாக இருந்தாலும் இவர்களுடைய இப்போதைய நடவடிக்கைகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்திவிட முடியாது.இராணுவம் என்றால் அரச ஒடுக்குமுறை இயந்திரம் எனகடந்த காலங்களில் மக்களுக்கு விளங்கப்படுத்திய இவர்கள் இன்று அந்நியஇராணுவத்தின் கூட்டுடன் பழிவாங்கல்களையும் நடாத்தி வருகிறார்கள்.

ஆயுதங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து,விடுதலைக்காகப் போராடிய சக போராளிகளைக் கொன்றொழித்து,புத்தி ஜீவிகளையும் கொன்று கருத்துச் சுதந்திரத்தையே தடுத்து இன்றைய நிலைமைக்கு ஒரு வழியில் காரணமான புலிகள் தமது வழிமுறைகளினால் ஓரளவுக்கு தனிமைப்பட்டுப்போன நிலையில்,இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான(தமக்குச் சாதகமாக இல்லாத சந்தர்ப்பவாதத்தினால்) போராட்டத்திற்கு மக்களின் முழுமையான ஆதரவைப் பெறமுடியாதுள்ளனர்.போராட்டங்கள் அனைத்துமே பலவீனமடைந்துள்ள இன்றைய நிலைமையில் சகல அடக்குமுறையானர்களும்,சுரண்டல்காரர்களும் பலமடைந்து வருகிறார்கள்.இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கைகளும்,இயக்கங்களின் பழிவாங்கல் நடவடிக்கைகளுமே மிஞ்சிப்போன நிலையில் மக்கள் தொடர்ந்தும் உயிரை இழந்து கொண்டிருப்பதா சுதந்திரம்?

தமது உடம்பை எந்த விதத்திலும் வருத்தாது,மற்றவர்களின் உடம்பைப் பயன்படுத்தி வருமானத்தையும்,சொத்துகளையும் சேர்த்துக் கொண்டிருக்கும் கும்பல்களின் கையிலிருக்கும் அதிகாரம்,அவர்களால் சுரண்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டப்பட்டுக் கொண்டிருக்கும், உழைப்பைத் தவிர எதுவுமில்லாத மக்களால் பறித்தெடுக்கப்பட்டு அந்த அதிகாரம் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பயன்படும் போதுதான் உண்மையான சுதந்திரம் கிடைக்கும். இந்த சுதந்திரத்தை நோக்கிய போராட்டத்திற்கு உழைப்பாளிகளுடன், சிதறிக் கிடக்கும் பாட்டாளி வர்க்க நலன் விரும்பும் போராளிகளையும், முற்போக்காளர்களையும் ஒன்றிணைப்போம்.

இலங்கையில் 'ஜனநாயகத்' தேர்தல் !



www.tamilarangam.net

எமக்கென்று க வேண்டும்.

நிலவதன் கனவுலகைக் கலைத்த
வானவீதியிலே செங்கீற்றாக ஒளித்
தோற்றுவிக்கும் அவ்வாதவனும்
செங்கீற்றுகள் உதயமாவதை
முன்கூட்டியே காதற் சங்கீதங்களிசைக்கும்
அக்கோ வண்ணப் பறவைகளும்
வண்ணப் பறவைகளின் ஒலிகள் எல்லாம்
ஒருங்கு சேர்ந்ததால் நிதானமாய்
வீசும் அக் காலை இளந்தென்றல் காற்றும்
அந்தக் காற்றினசைவினிலே
அங்குமிங்கும் கும்மியடிக்கும்
அந்தப் பசும் வயல்களும்
வயல்களின் சலசலப்பினால் முறுவலித்த
வெண் மணற் பரப்புகளிலே
மகிழ்வ லைக ளைக் கொஞ்சும்
அந்த நீலக் கடலும்
நீலக் கடலிலே நிமிர்ந்து நிற்கும்
அந்தக் கட்டுமரங்களும்
கட்டுமரங்களிலே கடுங் காற்றையும்
காத லையும் பொருட்படுத்தாது
உழைத்த மக்களின் விளைவுகளும்
அம் மக்களின் விளைவுகளாய்
காணுமிடமெங்கும் வியாபித்திருக்கும்
ஆலைகளும், தொழிற்சாலைகளும்
அவ்வாலைகளினுள்
சாரிசாரியான மக்கள் சக்தியற்று
இயந்திரங்களுடன் இயந்திரங்களாய்
இயங்கிக் கொண்டிருக்கும் நிலமைகளும்
இந் நிலமைகளுடன்
சாலையோரத்துச் சகதிகளாய்
எதுவுமேயற்ற அல்லலுறும் மக்களின்
ஓலங்களையும் மீறி இரைந்து கொண்டிருக்கும்

இயந்திர சாதனங்களும்
இவற்றையெல்லாம் தமதாக்கி
உட்கார்ந்து உரமெடுத்து
உல்லாப சல்லாபங்களில் திளைத்து மூழ்கும்

இளஞ்செழியன்

www.tamilarangam.net

கொள்ளைக் கூட்டத்தின்
நயவஞ்சக உற்பத்திச் சுவீகரிப்புத்
அந்தச் சுவீகரிப்புச் சுரண்டலினால்
மக்கள் இழைத்துப் போய்விட்டதினால்
வண்ணமாய் அவர்களிடமிருக்கும்
பொருட்களை எனத்தும்
எமக்கென்று
உழைக்கும் மக்களான
எமக்கென்று
ஆ(க்)க வேண்டும்.

---

# கண்ணீர்ப் பூக்கள்

காலைப் பொழுது விடிந்ததென தவழ்ந்ததொரு தென்றல்
எம் அன்னை மடியில் முத்தவன் நீ
காலத்தின் சுழற்சியில் தந்தையை இழந்து
தந்தையென பொருள்படும் நேரத்தில்
தந்தையாக உடன்பிறந்தவர்கள் நெஞ்சங்களில்
சகோதர பாசம் இலைமறை காயென்றில்லாமல் - அன்பான
சகோதரன் நானே தோழனும் நானே -என
ஈன்றவள் நெஞ்சம் முதல் அறிந்தவர் இதயம் வரை
கானல் வெயிலில் விழுந்து துடிக்கும் புழுவென
துடிதுடிக்கும் இதயங்கள் எத்தனை - நீ
பாதி வழியினிலே மீளாத்துயில் கொண்டாயோ
உன் உடன் பிறந்த நெஞ்சங்கள்
கண்ணீராற்றில் நனைகின்றனவே - அண்ணா
என்றழைக்க ஒரு சொல் நமக்கெங்கே
காலன் உனை தீண்டும் நேரத்தில் - நீ
சொல்ல துடித்த வார்த்தை என்ன?
துடிதுடித்த உன் உதடுகள் எப்படித்தான்
முடியதோ பூ முடிக்கும் நேரத்தில் உன்
கதை முடித்தாயோ அண்ணா நீ சென்ற பாதையில்
உன் ஆத்ம சாந்திக்கு எனது கண்ணீர்ப் பூக்கள்

- கே.சோதி

# கேள்வி? பதில்!

தூண்டில் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் தர முனையும்போது முக்கியமான ஒரு முற்குறிப்பு அவசியம் என கருதுகிறேன். ஒரு பொருளியலாளன், சமூகவியலாளன், அல்லது அரசியல் ஆய்வாளர்கள் சமூகப் பிரச்சினையை விளங்கிக் கொள்கின்ற அல்லது அணுகுகின்ற முறையில் ஒரு கலைஞன் அதனை விளங்கிக் கொள்வதில்லை. ஒரு கலைஞனுக்கு எத்தகைய சமூகப் பிரச்சினையும் மனிதம் என்ற அடியிலிருந்து கிளம்பும் பல்வேறு பரிமாணங்களாகத் தெரியும். இவற்றை உணர்வோடு பிணைத்துக் கொள்வதிலேயே கலைஞனின் கலையாக்கத்தின் வெற்றி தங்கியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் கலைஞன் பிரச்சினைகளோடு உணர்வுபூர்வமாகத் தன்னைப் பிணைத்துக் கொள்பவன். ஒரு அரசியல் ஆய்வாளன் உணர்வு பூர்வமாகத் தன்னைப் பிணைத்துக் கொள்ள மறுப்பவன். அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ நான் இந்த இரண்டு துருவங்களிலும் மாறி மாறிச் சஞ்சரிக்க வேண்டியவனாக உள்ளேன். உங்களுடைய கேள்விகளுக்கு கலைஞனாக இருந்தும், அரசியல் ஆய்வாளனாக இருந்தும் பதிலளிக்க வேண்டியுள்ளது.

— சேரன்

? மரபுக் கவிதையா, புதுக் கவிதையா சாதாரண மக்களைச் சென்றடைகிறது? ஏன்?

? புதுக் கவிதையின் தாக்கம் இப்போது என்ன?

பாசல் (சுவிஸ்) — கே. சிவனேந்திரன்

! உண்மையில் சாதாரண மக்களைச் சென்றடைவது மலினமான சினிமாவும், மூன்றாந்தர, நாலாந்தர சினிமாப் பாடல்களும்தான். நல்ல கவிதைகள் மட்டுமல்ல நல்ல நாவல்கள், நல்ல திரைப்படங்கள் போன்றவற்றிற்கும் சாதாரண மக்களுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி உள்ளது. நமது முதலாளித்துவ கலாச்சாரச் சூழல் கலைகளை வியாபாரமாக்கி விடுகிறது. இதனால் கவிதை இலக்கியம், திரைப்படம் என்பன மனித மேம்பாட்டுக்காக அன்றி பணம் குவிக்கும் சாதனமாகவே பயன்படுகின்றன. இது சாதாரண மக்களை கனவுலகத்தில் ஆழ்த்தி வைத்திருக்கக்கூடிய ஒரு போலிக் கலாச்சாரச் சூழலை இப்போது தோற்றுவித்துள்ளது. சாதாரண மக்களை, அவர்களுடைய அன்றாடப்பிர



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச்சினைகளைச் சிந்தரிப்பதனை டாகவும், பிரச்சினைகளுக்கும், போராட்டங்களுக்கும் முகம் கொடுப்பதற்கு உணர்வு தருவதை டாகவும் அணுகுவதை விடுத்து பிரச்சினைகளிலிருந்து 'தப்பி ஓடும்' மனோபாவத்தை ஊட்டி, ஒரு கனவுலகத்துக்கு அவர்களை அழைத்துச் செல்வதிலேயும், அதன் மூலம் பணம்சம்பாதிப்பதிலேயும்தான் நமது கலாச்சாரச் சூழல் அக்கறையாயுள்ளது.

திரையில் கதாநாயகன் 5 நட்சத்திர கோட்டலில் சாப்பிட்டு, காதலியுடன் கனவுலகக் காட்சியில் ஆடிப் பாடுவதைப் பார்த்து மெய்மறந்து தன்னையே கதாநாயகனாக உருவகித்து விட்டுப் படம் முடியத் தெருவோரப் 'பைப்'பில் தண்ணீர் குடித்துவிட்டு (சாப்பிடக் காசில்லை) தூங்கச் செல்லுபவர்கள்தான் நமது சாதாரண மக்கள். இந்தச் சாதாரண மக்களுக்குக் கவிதை என்று தெரியவருவதெல்லாம் 'ஓரம்போ ஓரம்போ' வகையறாச் சினிமாப் பாடல்கள்தான்.

இந்தப் பின்னணியில்தான் கவிதை, புதுக்கவிதைக்கு வர வேண்டும். பொதுவாகவே கவிதையின் வட்டம் அதாவது மக்களைச் சென்றடையும் பரப்பு மற்றைய கலை வடிவங்களை விடக் குறுகியவையே. ஒரு நாவல், சிறுகதைகளை வாசிப்பவர்களைவிட கவிதையின் வாசகர்கள் குறைவுதான். எனவே பொதுவாகச் சாதாரண மக்களைச் சென்றடைவதில் கவிதைக்குப் பலதடைகள் உள்ளன.

இந்தத் தடையை ஒரு நல்ல கவிஞன் மீற முடியும். கவிதையின் தரத்தை இழக்காமல் அதே நேரம் கவிதையை இயலுமானவரை சாதாரண மக்கள் மட்டத்திற்கு கொண்டு போவதற்கு சில ஆரம்பச் சமரசங்கள் தேவை. உதாரணமாக 1985, 86 காலப் பகுதியில் கவிதையையும்—பிரதானமாக அரசியற் கவிதைகள்— இசையையும், பாடல்களையும் இணைத்து நாம் தயாரித்த கவிதா நிகழ்வு எனும் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பரவலாக மக்களிடம் செல்வாக்குப் பெற்றது. இதனுடைய ஒலிப்பதிவு நாடாக்கள் நூற்றுக்கணக்கில் விற்பனையாகின. தவிர நிகழ்ச்சியில் இடம் பெற்ற கவிதைகளும் தெருச் சுவரில் சுலோகங்களாக மாறுமளவிற்குப் பிரபலமாயின. இதற்கு அரசியற் சூழலும் ஒரு காரணம்தான்.

நல்ல கவிதைகளும், நல்ல இலக்கியமும் சாதாரண மக்களிடம் சென்றடைய வேண்டுமானால் கலைஞர்கள் சாதாரண மக்களை புறக்கணிக்காமல் அதநேரம் கலைத் தரத்தையும் இழக்காமல் படைப்புகளைத் தர முயலவேண்டும். தமிழில் திரைப்படங்களைப் பொறுத்தவரை பாலுமகேந்திரா, மகேந்திரன், ருத்ரையா போன்றவர்கள் இவ்வாறு முயன்றுள்ளனர். நாடகத்தைப் பொறுத்தவரை மௌனகுரு, தாசீசியஸ், மௌனகுரு, பாலேந்திரா, சிதம்பரநாதன் போன்றவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். கவிதை பற்றி ஏற்கெனவே சொல்லியாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடைய இரண்டாவது கேள்விக்கு முதற் கேள்விக்கான பதிலையும் நினைத்துக் கொள்ளுங்கள். என்னைப் பொறுத்தவரை கவிதைதான் உண்டு. கவிதை என்ற தரத்துக்கு வர முடியாதவை செய்யுள்களே அல்லது வசனம் அல்லது வேறு ஏதோ ஒன்று. புதுக் கவிதை என்ற பெயர் தற்காலிகமானது. யாப்புடன் செயற்கையான முறையில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி எழுதிக் கொண்டிருந்த மரபுக் கவிதையின் தேக்க நிலையை உடைக்கத் தோன்றிய ஒருவகையான நவீன கவிதையைப் புதுக் கவிதை என்றழைக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் வந்துவிட்டது. ஈழத்தைப் பொறுத்தவரை மரபுக்கவிதையின் இத்தகைய தேக்கம் நிகழவில்லை. மாறாக யாப்பை மீறாமலேயே ஒருவகை நவீன கவிதை முறை மகாகவி, நுஃமான், முருகையன், சண்முகம், சிவலிங்கம் போன்ற கவிஞர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. பின்னர் இம்மரபும் மெல்ல மெல்ல யாப்பை உதறிற்று. எனினும் அடிப்படையிலான ஒத்திசை, கவித்துவம், ஓசை போன்றவற்றை இம் மரபு இன்றும் பேணி வருகிறது. நானும் கூட இந்த மரபின் ஒரு வாரிசுதான். இந்தியத் தமிழகத்தைப் பொறுத்தவரை இன்று புதுக் கவிதை என்ற பெயரில் எவரும், எதையும் எழுதலாம் என்று வந்துவிட்டது.

காபரேக் காரியைக்
கட்டிக் கொண்டேன்
மியூசிக் இன்றி
அவிழ்க்க மறுக்கிறாள் என்றோ அல்லது
இரண்டும் ரெண்டும் நாலு
நாலும் நாலும் எட்டு

நீயும் நானும் ஃபிட்டு (Fit) என்றோ எழுதிவிட்டால் புதுக்கவிதையாகிவிடுகிறது. இந்த வகையில் புதுக் கவிதை என்பது மிகவும் மலினமான முறையில் குமுதம், விகடன் போன்ற சஞ்சிகைகள் மூலம் பரவலாக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தகையவற்றுள் எத்தனை கவிதையாகத் தேறும் என்பதுதான் கேள்வி. நமது நாட்டிலும் பெரும்பாலான புதுக்கவிதைகளின் நிலையும் இதுதான்.

என்வரையில் கவிதையின் பெயர் கவிதைதான். அது யாப்புக்குள் இருந்தும் எழுதப்படலாம். யாப்பை மீறியும் எழுதப்படலாம். வசனத்திலிருந்து கூட கவிதை உணர்வைப் பிரதிபலிக்கலாம். கவிதை எது? கவிதை அல்லாதது எது என்பதைப் பிரித்தறிய வாசகருக்குப் பயிற்சியும், ஈடுபாடும், அக்கறையும் அவசியம். உதைபந்தாட்டம் பார்ப்பது போலவோ அல்லது பாட்டுக்குப் பாட்டு கேட்பது போலவோ கவிதை ரசனையும் கவிதை எழுதுவதும் பொழுதுபோக்காக மாற முடியாது. கவிதை வாழ்க்கையாக வேண்டும். அப்போதான் தாக்கமான முறையில் கவிதை பணிபுரிய முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

? ஐரோப்பாவிலிருக்கும் படைப்பாளிகள் தங்களுடைய ஆக்கங்களை எந்த ரீதியில் படைக்க வேண்டும்?

பேர்லின் — மனோகரன்

! ஒரு படைப்பாளி தன்னுடைய ஆக்கத்தை எந்த ரீதியில் படைக்க வேண்டும் என்று ஒருவரும் வாய்ப்பாடு போலக் கட்டளையிட முடியாது. விமர்சகர்கூட இதற்கு விதிவிலக்கில்லை. ஒரு படைப்பாளி தன்னைச் சூழ உள்ள மனிதர்களால் நிகழ்ச்சிகளால், பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறான். இந்தப் பாதிப்பை உள்வாங்கி, வெளிப்படுத்தும்போது அது பல தரப்பட்ட முறைகளில் படைப்பாகிறது. எனவே நீங்களும் இந்த அடிப்படையான விதிக்கு உட்பட்டவர்கள்தான். எனினும் ஒரு முக்கியமான வித்தியாசத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஐரோப்பாவில் வாழ்ந்தாலும் எங்களுடைய வாழ்நிலையின் கணிசமான பகுதி ஈழத்துடனேயே பிணைந்துள்ளது. எனவே ஐரோப்பியச் சூழலில் ஈழத்து மனநிலையும், அவலங்களும் பிரதிபலிப்பதை உணர்வீர்கள். இந்த வகையானஎழுத்தை WRITING IN EXILE என்று சொல்வார்கள். அதாவது நாட்டை விட்டு வெளியேறினாலும் அந்த வெளியேற்றம் மறுபடியும் நாட்டை இன்னொரு கோணத்தில் திரும்பிப் பார்ப்பதற்கும், எழுதுவதற்கும் உதவுகிறது. இன்னுமொரு வித்தியாசம் ஐரோப்பிய அனுபவம் தமிழுக்கு நல்ல படைப்புகளாக வளம் சேர்க்கட்டுமே.

? ஈழத்து இலக்கியங்களுக்கும், இந்திய இலக்கியங்களுக்குமிடையில் என்ன வித்தியாசங்களைக் காண்கிறீர்கள்?

நூறன்பேர்க் — சு. விக்ரர்

! நிறைய வித்தியாசங்கள் உண்டு. நாவல், சிறுகதைகள் போன்றவற்றில் இந்திய தமிழில் குறிப்பிடத்தக்களவு சாதனைகள் நிகழ்ந்துள்ளன. கவிதை, நாடகங்களைப்பொறுத்த வரையில் ஈழத்துத் தமிழில் குறிப்பிடத்தக்களவு சாதனைகள் நிகழ்ந்துள்ளன.

முக்கியமான வித்தியாசம், எமக்கிருக்கும் புறநிலை யதார்த்தம். யுத்தம், அவலம், மரணம், வீடற்ற நிலை என்பன இந்தியத் தமிழ் எழுத்துக்குப் பகைப்புலமாக இல்லை. இதனால் ஈழத்துத் தமிழ் புதிய அனுபவங்களை தமிழ் எழுத்துலகத்துக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளது.

? பணத்துக்காகவும், புகழுக்காகவும், சமுதாயத்துக்காகவும் எழுதுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

? புதிதாக கவிதை எழுத ஆரம்பிக்கும் ஒருவருக்கு நீங்கள் கூற விரும்பும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

? ஆலோசனை என்ன?

ஒஸ்லோ (நோர்வே) ரி.குமார்

! பணத்துக்காகவும், புகழுக்காகவும் எழுதுபவர்கள் வியாபாரிகள். சமுதாயத்துக்காக எழுதுபவர்கள் எழுத்தாளர்கள். எழுத்தைப் படைப்பாக்குபவர்கள் கலைஞர்கள்.

! புதிதாக கவிதை எழுத ஆரம்பிப்பவர்களுக்கு அறிவுரை கூறவோ ஆலோசனை வழங்கவோ எனக்கு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நானும் ஒரு கட்டத்தில் புதிதாக எழுத ஆரம்பித்தவன் என்ற முறையில் என்னுடைய அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நிறையக் கவிதைகளை வாசித்ததாகவும், பல கவிதைகளை வாய் விட்டுச் சொல்லிப் பாடமாக்கியதாகவும் ஞாபகம். அத்தோடு அப்போது நல்ல கவிஞர்கள் என்று கருதப்பட்டவர்களின் தொடர்பும், நட்பும், ஊக்குவிப்பும் கூட உதவின. மற்றது எழுத வேண்டும் என்பதற்காக எழுதிய ஞாபகமுமில்லை. மனதைத் தொடுகிற சந்தர்ப்பங்களில்தான் எழுத முடிந்திருக்கிறது.

மரபுக் கவிதை, புதுக்கவிதை, யாப்பு பற்றிக் குழம்ப வேண்டிய அவசியமும் இல்லை. கவிதையை கவிதையாக எழுத முனைந்திருக்கிறேன். ஒத்திசை, ஓசை எல்லாம் பின்னர் வந்து சேர்ந்து கொண்டன. மனதுக்குப் பிடித்த கவிஞர்களை, கவிதைகளை திரும்பத் திரும்ப வாசித்துள்ளேன். இதயத்தையும், அறிவையும் எப்போதும் திறந்து வைத்திருக்கிறேன். அவ்வளவுதான்.

? சீதனம், சாதி, பெண்ணடிமை போன்ற தமிழரின் பழம் பெரும் சொத்துக்கள் தற்போது மக்களிடம் என்ன நிலையில் உள்ளன?

பிராங்போட் சிவயோகம்

! தமிழருடைய பழம் பெரும் சொத்துகளைப் பற்றி கேட்கிறீர்கள். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு (வாலொடு?) முன் தோன்றி மூத்த குடியல்லவா நாம்? பழமையை அவ்வளவு எளிதில் விட்டுக் கொடுத்து விடுவோமா? விடுதலைப் போராட்ட அலை தமிழ்ச் சமுகத்தில் நிறையப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். எனினும் சீதனம், பெண்ணடிமை, சாதி போன்றன உடனடியாக இல்லாமல் போய் விடாது.

பெண் விடுதலை பற்றிய கருத்துகள், பெண்ணடிமைத்தனத்துக்கு எதிரான கருத்துகள் என்பன கணிசமானளவு பரவ ஆரம்பித்துள்ளன. குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

84 இற்குப் பிற்பாடு. பல்வேறு பெண்ணுரிமை அமைப்புகள் உருவாகின. சஞ்சிகைகளும் வெளிவந்து கொண்டுள்ளன.

சீதனம், சாதியைப் பொறுத்தவரை பெரிதான மாற்றங்கள் இல்லாவிட்டாலும் அரசு ஒடுக்குமுறை 'தமிழ் மக்கள்' என்ற ஒரு உணர்வை பலப்படுத்தியுள்ளதால் இளைய தலைமுறையினரிடம் சாதி பற்றிய பழைய மூட கற்பிதங்கள் பலமாக வேர்விட முடியாதென்று கருதுகிறேன்.

? படித்தவர்களின் பங்கு தமிழ்ச் சமுதாயத்தில் எந்தளவிற்கு உள்ளது? எப்படி இருக்க வேண்டும்?

பொன் ஆர். எஸ். சுந்தரம்

! படித்தவர்களின் பங்கு தமிழ்ச் சமுதாயத்துக்குப் போதுமானளவு இன்னும் கிடைக்கவில்லை. பிரதான காரணம் நமக்கென்றொரு தேசிய அமைப்பு இது வரை உருவாகாததுதான். எமது நீண்டகால, துயர, அரசியல் வரலாறும் தமிழ்மக்களை ஒரு புலம் பெயரும் சமுதாயமாகவே மெல்ல மெல்ல மாற்றி விட்டது. நமக்கென்று எப்போது ஒரு சுதந்திரமான அரசு அமைப்பு உருவாகுமோ அதன் பின்னர்தான் நாம் பல்வேறு நாடுகளிலும் சிதறிக் கிடக்கும் நம்மவர்களின் பங்களிப்பை ஆக்கபூர்வமான முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

? தற்போதைய இலங்கை நிலவரம் என்ன?

விற்றன் அசோக்குமார்

! வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி அராஜகத்துக்கு குறைவில்லை. மனிதர்கள் வாயைத் திறப்பது ஒரு கவளம் சோற்றை வாய்க்குள் போட மட்டும்தான் என்று என்னுடைய நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். தைரியமாக வாயைத் திறந்து நாலு வார்த்தைகள், தன்னுடைய மொழியில் பேசுவதற்குரிய தைரியம் திருவாளர் நாய்க்குத்தான் இன்று உண்டு.

இந்த நிலமை மாறும்வரை சாதாரண ஜனுபகம் பற்றி யாராவது பேச முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

---

சேரன் பதிலளித்த கேள்வி — பதிலின் தொடர்ச்சி அடுத்த கலத்தில் வெளிவரும்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மதம்

- பாரதி

மதம் என்ற சொல்லிற்கு வெறி என்றும் பொருள் உண்டு. மனிதர்களுக்கு வெறியூட்டி குழப்பங்களை அல்லது முட்டாள்த்தனமான காரியங்களைச் செய்ய வைப்பதாலும், வெறியூட்டி மக்களை ஒரு போதை நிலையில் (சுய சிந்தனையை மழுங்கடித்து) வைத்திருப்பதாலும் மதம் என்றசொல் பொருத்தமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. எல்லா வழிகளாலும் ஒடுக்கப்படும் மக்களும், சுரண்டப்படும் உழைப்பாளிகளும் தங்களது நிலையை உணர்ந்து ஒடுக்குபவர்களையும், சுரண்டல்காரர்களையும் எதிர்த்து முறியடிக்காமல் அவர்களது போர்க் குணாம்சத்தைச் சாந்தப்படுத்தி விதி, முற்பிறப்பில் செய்த பாவம், இறைவனின் சோதனை என்று அவர்களது கவனத்தைத்திசை திருப்பி புரட்சியை மழுங்கடிக்கும் வேலையைத்தான் மதங்கள் அன்று முதல் இன்றுவரை செய்து வருகின்றன. ஏனெனில் இந்த மதங்கள் யாவும் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவை. விசேடமாகச் சொல்வதென்றால் சுரண்டல்காரர்களாலும், அடக்குமுறையாளர்களாலும் அவர்களுக்கெதிரான போராட்டங்களை மழுங்கடித்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டன. இதனாலேயே மதங்கள் சாதிப் பிரிவினையைத் தூண்டி, பெண்ணடிமைத்தத்துக்கும் பலமளித்து இன்று அரசுகளையும், தனிச் சொத்துக்காரர்களையும் பாதுகாத்து வருகின்றன.

காட்டுமிராண்டிக் காலத்தில் மனிதர்கள் வாழ்ந்த போது அங்கே மதம் இருக்கவில்லை. மழை, இடி, மின்னல் போன்ற இயற்கைகளைப் பார்த்துப் பயந்த மனிதர்கள் (அப்போது விஞ்ஞான அறிவு இல்லாததால்) தன்னை மீறிய ஒரு சக்தி இருப்பதாகக் கருதி அதைச் சாந்தப்படுத்துவதாக எண்ணி வழிபாடு செய்தார்கள். அப்போது அருவத்தை நோக்கிய பயத்தினாலான வழிபாடு இருந்ததே தவிர கடவுள் என்ற உருவ அமைப்புகளோ, மதப் பிரிவுகளோ (மதம் என்றோ) இருக்கவில்லை.

காட்டுமிராண்டிச் சமுதாய அமைப்பிலிருந்து பண்ணை, பயிர்ச் செய்கை, உழைப்பு, உற்பத்தி என்ற சமுதாய அமைப்புக்கு மாறியபோது சொத்துச் சேகரிப்பு உண்டாகியது. இதனால் சொத்தைப் பாதுகாக்கும் எண்ணமும், தனது சொத்தை தனது வாரிசே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமும் உதயமாகியது. இதன் காரணமாக ஆரம்பத்தில் தாய்வழிச் சமுதாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக இருந்த அமைப்பு ஆணாதிக்கச் சமுதாயமாக மாறியது. சொத்துச்சேகரிப்பிலும், சொத்துப் பாதுகாப்பதிலும் ஆண் ஈடுபட்டதால் அந்தச் சொத்துக்கான வாரிசைத் தரும் வேலை பெண்களிடம் கொடுக்கப்பட்டது. இந்த ஒன்றைக் கருதியே பெண்களின் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டன. அவள் வீட்டுக்குள் அடிமையாக்கப்பட்டாள்.

இந்த அமைப்பில் உருவான நிலப்பிரபுத்துவ காலத்தில் ஆதிக்கம் வகித்த ஆண்களும், சொத்து வைத்திருந்தவர்களும் தங்களது நிலையை மேலும் வலுப்படுத்த முயன்றனர். இந்த நேரத்தில்தான் இவர்களால் மதங்கள் உருவாக்கப்பட்டன. கடவுள்கள் படைக்கப்பட்டார்கள். மதங்களின் ஆண்களின் நலன் பேணும் பெண்ணடிமைத்தனம் பேணப்பட்டது. குங்குமம், தாலி போன்ற பெண்ணடிமைச் சின்னங்கள் உருவாக்கப்பட்டன. பதிவிரதை, படிதாண்டாப் பத்தினி, கற்புக்கரசி என்றெல்லாம் பெண்களுக்கென விசேடமான வரைவிலக்கணங்கள் உருவாக்கப்பட்டன. ஆணாதிக்கவாதிகளால் படைக்கப்பட்டதால் கடவுள்கள் கூட ஆண்களாகவே அனேத்து மதங்களிலும் படைக்கப்பட்டனர். இந்து மதத்தில் சக்தி என்ற 'தெய்வம்' இருந்தாலும் சிவனுக்குள் இது அடக்கம் என்று ஆணாதிக்கம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. சரஸ்வதி, இலட்சுமி, போன்றவர்கள் ஆண் கடவுள்களின் உறுப்புகளிலிருந்து தோன்றியவர்களாம். அனேத்து மதத்தின் நாயன்மார்களாகவும், போதகர்களாகவும், 'கடவுளின்' பிரதிநிதிகளாகவும் ஆண்களே இருந்துள்ளனர். மதங்களைப் படைத்து, கடவுள்களையும் படைத்துப் பரிபல்யப்படுத்தி பாடியவர்களும், கதைகளை உருவாக்கியவர்களும் பெரும்பாலும் ஆணாதிக்கவாதிகளே.


இப்படிப் பெண்ணடிமைத்தனத்தைப் பேணியதைப் போலவே உழைக்கும் மக்களையும் ஒடுக்க மதம் பாவிக்கப்பட்டது. உழைப்பாளிகளின் உழைப்பை உறிஞ்சி தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டவர்கள் மேல் உழைப்பாளிகளின் எதிர்ப்பு திரும்பிவிடாமலிருக்க சுரண்டல்காரர்கள் முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர்களென்றும், தெய்வ அனுட்டானம் கிடைக்கப்பெற்றவர்களென்றும் சொல்லப்பட்டது. அதற்கமைய கதைகள் உருவாக்கப்பட்டன. சொத்துகளற்ற உழைப்பாளிகள் முற்பிறப்பில் பாவம் செய்தவர்களென்றும், அவர்களுடைய விதி இதுவென்றும், தமது நிலைமையை மாற்ற அவர்கள் இறைவனை வழிபட்டால் போதுமென்றும் நம்ப வைக்கப்பட்டார்கள். இதற்கான புரான கதைகளும் நிலப்பிரபுத்துவ அமைப்பை பேணுபவர்களால் உருவாக்கப்பட்டு போதிக்கப்பட்டன.

அன்றைய நிலப்பிரபுக்களும், இன்றைய முதலாளிகளுமே தர்மகர்த்தாக்களாகவும், ஆலய நிர்வாகிகளாகவும் இருந்து வருகிறார்கள். ஒடுக்கப்படுபவர்களும், உழைப்பாளிகளும் தங்கள் புரட்சிக் குணங்களை இழந்து 'அனேத்தையும் ஆண்டவனிடம் முறையிடுவதற்காக' இவர்களால் பிரம்மாண்டமான அளவுகளில் ஆலயங்கள் கட்டப்பட்டு திருவிழாக்கள் ஒழுங்கு செய்

(தொடர்ச்சி 25ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




18.12.88 (வீக்கெண்ட்)

1988 ஜனவரியிலிருந்து நவம்பர் மாதம் வரை இலங்கையில் காணாமல் போனவர்கள் தொகை 3,000.

19.12.88 (டெய்லி நியூஸ்)

16.11.88 இலிருந்து 14.12.88 வரை வடக்கு, கிழக்கில் கொலை செய்யப்பட்ட பொதுமக்கள் தொகை 69. தென்னிலங்கையில் கொலை செய்யப்பட்டவர்கள் தொகை 405.

24.12.88 (வீரகேசரி)

மட்டக்களப்பில் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட அமான் என்பவர் சயனைட் அருந்தி மரணமானார்.

கப்புத்தளை பிட்டரத்மலை தோட்டத்தைச் சேர்ந்த கே.ராமநாதன், எம்.மகேஸ்வரன், எம்.சோமசுந்தரம் ஆகிய மூவரும் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து 7,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தென்னிலங்கையில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

நடுக்கடலில் படகில் ஏற்பட்ட விபத்தினால் 50 நாட்கள் உயிருக்காகப் போராடிய 6 மீனவர்களில் ஒருவர் மரணமாக ஏனையோர் பர்மா தீவில் கரையொதுங்கினர். அங்கே இவர்கள் கீழ்த்தரமான முறையில் சிறையில் அடைத்து வைக்கப்பட்டபின் இலங்கை தூதவராலயத்தின் உதவியுடன் நாடு திரும்பினர்.

25.12.88 (சண்டே டைம்ஸ்)

தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் வடக்கிலும், கிழக்கிலும் பிரச்சினைகளை அதிகரிக்கின்றன. ஏனெனில் நிராயுதபாணிகளான புலி இயக்க ஆதரவாளர்களும், ஈரோஸ் உறுப்பினர்களும் போட்டி ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டுள்ளார்கள். தகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் சட்டத்தை நேர்மையாகவும், சமநிலையாகவும், உறுதியாகவும் நடைமுறைப்படுத்தவில்லையோ அங்கே வன்முறையும், குற்றங்களும் அதிகரிக்கும். போட்டிக்குழுக்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்குப் பதிலாக இந்தியா ஆயுதப் புரட்டல் செய்வதுடன் தமிழ் மக்களையும் பயமுறுத்தி வருகிறது. இதுவே தமிழ்ப் பகுதிகளின் தற்போதைய சூழ்நிலை. — யாழ்ப்பாணத்திலிருந்து

www.tamilarangam.net

அம்பாறைப் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளதால் மக்கள் இடம் பெயர்ந்துவருகின்றனர்.

ஈச்சிலம்பத்தையிலிருந்து இந்திய இராணுவத்தால் வெளியேற்றப்பட்ட விவசாயிகள் அயல் கிராமங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். அரசின் நிவாரண உதவிகள் எதுவும் இவர்களுக்கு கிடைக்காததால் பட்டினியால் வாடுகின்றனர்.

30.12.88 (ஐலண்ட்)

வடக்கு, கிழக்கு மாகாணசபை இணைப்பு பற்றிய பொதுசன வாக்கெடுப்பு ஜுலை மாதம் 5ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

30.12.88 (டெய்லி ஒப்சேர்வர்)

கடமையிலிருந்தபோது இனம் தெரியாத நபர்களால் சங்குவேலி உததபாற்கந்தோர் அதிபர் எ.ஜெகநாதன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

01.01.89 (சன்டே ரைம்ஸ்)

"நாங்கள் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கிறோம். இந்தியா எங்களுக்கு உதவ வருகிறதென நாம் நினைத்தோம். ஆனால் அவர்கள் வந்து எங்களையே தாக்குகிறார்கள். அவர்கள் பொதுமக்களை, பீரங்கிகளாலும், கவச வாகனங்களிலும் தாக்குகிறார்கள். அவர்கள் தொடர்ந்தும் பொதுமக்களை தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள்." — யாழ்ப்பாணத்திலிருக்கும் கத்தோலிக்க பாதிரியார்.

"இவர்களுக்காக இந்தியா பலவற்றைச் செய்தது. ஆனால் இங்கே நன்றி இல்லை. சிங்கள மக்கள் எங்களை வெறுக்கிறார்கள். ஏனெனில் அவர்களது தேசிய பெருமையை காயப்படுத்திவிட்டதாக. தமிழர்களும் எங்களை விரும்பவில்லை. இத்தனைக்கும் மேலாக புது டில்லியிலிருக்கும் எங்களுடைய சொந்த அரசாங்கத்திலிருந்தும் எந்தப் பாராட்டும் இல்லை." — யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்திய இராணுவ அதிகாரி.

"எங்களைப் பற்றி யாருக்கும் அக்கறை இல்லை. எங்களுடைய மரணங்களைப் பற்றிமட்டும்தான் இந்தியப் பத்திரிகைகளில் எழுதப்படுகிறது. அது கூட அரசாங்கத்துக்கு பொருத்தமாயிருந்தால் மாத்திரமே. உதாரணமாக ஜுன் முதலாம்திகதி இந்தியப் பாதுகாப்பமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது 18 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று செய்தி வரும். பாவம் இந்திய இராணுவத்தினர் செத்த பின்பும்கூட புறக்கணிக்கப்படுகிறார்கள். ஏனெனில் இவர்கள் 'பிழையான திகதியில்' இறந்துள்ளார்கள்." — யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்திய மேஜர்.

"ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், இந்திய இராணுவமும் மக்களை கொடுமைப் படுத்துவதை நிறுத்தி தங்களது வழிமுறைகளை மாற்றிக் கொண்டால் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம். நாங்கள் அமைதியையும், ஐக்கியத்தையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய இராணுவத்தின் தேடுதல் வேட்டையின்போது பொதுமக்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர்.

தென்னிலங்கையில் கடும் வரட்சி நிலவுகிறது. வாந்திபேதி, மலேரியா, சின்னம்மையினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில் கொட்டடியைச் சேர்ந்த ஏ.பிரேம்குமாரின் சடலமும், அரியாலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உமாசங்கரின் சடலமும், மஹேகரா திரேயட்டருக்கண்மையில் குருநகரைச் சேர்ந்த நியூட்டனின் சடலமும், கோண்டாவிலில் உருக்குமணியின் சடலமும், பொலிகண்டியில் கிருஉந்னமூர்த்தியின் சடலமும் காணப்பட்டன.

28.12.88 (வீரகேசரி)

சென்னைப் பொலிசார் ஒரு மாதத்துக்கு முன்னர் ரூபா 7 இலட்சம் கோரி வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 10 வயது இலங்கைத் தமிழ் சிறுவனை மீட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக டக்ளஸ் தேவானந் உட்பட 26 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் வடக்கைச் சேர்ந்த கருணாநந்தராசா ஜெயக்குமார் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

29.12.88 (சன்)

ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தமைக்காக தென்னிலங்கையில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

29.12.88 (வீரகேசரி)

கடந்த இரு தினங்களில் மட்டும் மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் 44 சடலங்கள் எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

நாவற்குடாவில் இந்திய இராணுவத்தினராலும், அவர்களின் கூலிகளாலும் கொல்லப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் அர்ஜுன், ராஜா, உருத்திரன், அஜித் ஆகியோரின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சர்வ பல்கலைக்கழக மாணவர் சங்க உறுப்பினர் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டார்.

இரவு நேர மீன்பிடித் தடைகளினால் பேசாலை, தலை மன்னார், மன்னாரில் 25,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாசிக்குடாவில் பொன்னையா தர்மலிங்கம் என்பவரும், மட்டக்களப்பில் சீனித்தம்பி என்பவரும், அவருடைய மனைவியும் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்து என்ற வாசகர் எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி.

25.12.88 (வீரகேசரி)

மாங்குளத்தில் மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.ஒன்று பெண்ணினுடையது.

நெடுங்கேணி நைனாமடுவில் 11 வீடுகள் எரிக்கப்பட்டன.

கந்தரலை பொலிஸ் வட்டாரத்தில் எச்.சோமதாச என்ற 3 பிள்ளைகளின் தந்தை கொலை செய்யப்பட்டார்.அக்குரஸ்ஸையில் இனம் தெரியாத நபரின் எரிந்த சடலம் கண்டெடுக்கப்பட்டது.

26.12.88 (வீரகேசரி)

மாத்தளைப் பகுதித் தோட்டத்தில் 10 லயன்கள் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.தொழிலாளிகளின் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளும்,கால்நடைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.300க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் காடுகளில் தஞ்சமடைந்துள்ளன.

தென்னிலங்கையில் 48 மணி நேரத்தில் 12 படுகொலைகள் நிகழ்ந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் வாக்குச் சீட்டுப் பெட்டிகளுடன் யாழ்ப்பாண செயலகம் நோக்கி வந்த இ.போ.ச. பஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதில் சாரதியான சுதுமலையைச் சேர்ந்த என்.விஜயசிங்கம் கொல்லப்பட்டார்.

தென்னிலங்கையில் இரு தினங்களில் 720பேர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை,மட்டக்களப்பில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

சுமார் 600 மாணவர்கள் கல்வி பயிலும் இணுவில் சைவமகாஜன மகாவித்தியாலயத்தின் கூரைகள் செல் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன.இவை இன்னமும் திருத்தப்படாததால் மழை பெய்யும்போது மாணவர்கள் குடை பிடித்தபடி படிக்கின்றனர்.

27.12.88 (வீரகேசரி)

வலஸ்முல்லயில் மூவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர்.பெலியத்தையில் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

'இந் நாட்டிலுள்ள சிறுபான்மை மக்கள் ஒருபோதும் ஒரு தனி அரசாங்கத்தை அமைக்க முடியாது.' — தேவநாயகம்.

விடுதலைப்புலி உறுப்பினர்களான சாந்தன் சிவம் ஆவரங்காலிலும்,சந்திரன்,உமாகாந்தன் காங்கேசன்துறையிலும் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.அம்பு என்ற காங்கேசன்துறைப் பகுதித் தலைவரும்,அருள்நாதன் என்ற மயிலிட்டிப் பகுதித் தலைவரும்,உடுவிலில் புலாசிங்காவும்,மன்னாரில் அருணும் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு காரணமாகும்.இதனால் 900 பிள்ளைகள்வரை பிறந்த ஒரு மாதத்திற்குள் இறக்கின்றன.இன்னும் ஒரு இலட்சம் பிள்ளைகள்வரை இறக்கலாம் என அஞ்சப்படுகிறது.இந் நாட்டில் ஒரு நாளைக்கு 11,000 பிள்ளைகள் பிறக்கின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக பெருமளவில் ஆயுத உற்பத்தியைக் குறைத்து, ஆசியாவிலும், ஐரோப்பா பகுதிகளிலும் இருக்கும் தருப்புகளிலும் 2 இலட்சம் படைவீரரை குறைப்பதாகவும் சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.

லிபியாவில் செய்தி ஸ்தாபனங்கள், அரச இலாகாக்கள், விளையாட்டு மற்றும் இறக்குமதி ஸ்தாபனங்கள் தேவையற்றவை என பல காரணங்கள் காட்டி மூடப்பட்டுவருகின்றன.

அமெரிக்காவின் கலிபோனியா மாநிலத்திலுள்ள பாடசாலை ஒன்றுள் புகுந்த ஒருவன் அங்கு விளையாடிக் கொண்டிருந்த தென்னாசியாவைச் சேர்ந்த அகதிப் பிள்ளைகளைச் சுட்டுக் கொன்றான்.இந்தச் சம்பவத்தில் மேலும் 30 பிள்ளைகள் படுகாயமடைந்தன.கொலைகாரன் பின்னர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டான்.

சோவியத்யூனியனின் ஏரோபுளொட் விமானம் மே.ஜேர்மனியிலிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் அன்பளிப்புப் பொருட்களை அமினியா பூகம்பப் பகுதிகளுக்கு கொண்டு சென்றது.பின்னர் பொருட்களை ஏற்றிச் சென்ற கூலியாக 650,000 மார்க் தரும்படி கேட்டது.செஞ்சிலுவைச் சங்கம் சோவியத் அரசுடன் தொடர்பு கொண்டு அவர்கள் தலையிட்டபின் இந்தப் பணக் கோரிக்கை கைவிடப்பட்டது.

அமெரிக்காவின் பரிசோதனைக் கூடங்களில் ஒரு வருடத்திற்கு ஒரு கோடி 70 இலட்சம் பிராணிகள் பயன்படுத்தப்படுகின்றன.இவைகளில் வெற்றி கண்ட பின்னரே மனிதர்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகிறது.

தென் துருவத்தில் அமெரிக்கா, மே.ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பரிசோதனைகளை நடாத்திவிட்டு வெடி மருந்துகள், எண்ணெய் பீப்பாக்கள் போன்றவற்றை அப்படியே விட்டுவிட்டு வருவதால் அங்கு வசிக்கும் பிராணிகள் பாதிக்கப்படுவதாக கிறீன்பீஸ் இயக்கம் குற்றம்சாட்டியுள்ளது.

பிறேசில் அரசாங்கம் நாட்டில் சிக்கன சீவிய முறையை ஆரம்பித்துள்ளது.இதன்படி சம்பளக் குறைவு, விலைவாசிகள் அதிகரித்தல் போன்றவை நடைமுறைப்படுத்தப்படும்.இதற்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.ஏற்கெனவே உலகில் முதலாவது கடனாளியான நாடு பிறேசில் ஆகும்.

வட இந்தியாவில் திடீரென குளிர் அதிகரித்தமையினால் 61 பேர் இறந்துள்ளனர்.

பங்களாதேசில் இரு கடுகதி புகைவண்டிகள் மோதிக் கொண்டதில் 150பேர்கொல்லப்பட்டனர்.1,000 பேர் காயமடைந்தனர்.

20 வருடத்திற்கு முன்பு ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்த தீமூட்டி தற்கொலை செய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகச் செய்திகள்

தொகுப்பு : சு.பூபாலச்சந்திரன்

(ஜனவரி மாத பத்திரிகை, வானொலிச் செய்திகள்)

வியாபாரம் குறைவு எனக் காரணம் காட்டி இங்கிலாந்தில் 1,500 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

துருக்கி நாட்டவர்கள் இங்கிலாந்திற்குச் சென்று தங்கள் உடலிலிருந்து ஒரு கிட்னியை வேறு நோயாளிகளுக்குப் பொருத்துவதற்காக விற்கிறார்கள். இது இங்கிலாந்தின் சட்டங்களில் இடம் கொடுத்தாலும் பல மோசடிகள் நடந்துள்ளது தெரியவந்துள்ளது. சரியாகப் பணம் கொடுபடாதது சம்பந்தமாக துருக்கியில் ஒரு வியாபாரியைக் கைது செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டுத் தேர்தலில் தி.மு.க அமோக வெற்றியீட்டி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இ.கா.வின் தோல்விக்கு இலங்கை அரசியலும் முக்கியகாரணமாக இருந்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு அண்மையில் உள்ள சோவியத்யூனியனின் ரட்கிஸ்தான் பகுதியில் பலத்த பூகம்பம் ஏற்பட்டது. இரு கிராமங்கள் முற்றாக சேதமடைந்தன. மக்கள் ஆயிரக்கணக்காக இறந்துள்ளனர். தபால், தந்தி, மின்சாரம் யாவும் தடைப்பட்டுள்ளன.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றேகனின் ஆட்சி முடிந்ததையிட்டு பனமாவில் றேகனின் உருவத்தைப் போல் பொம்மைகள் செய்து எரித்து சந்தோசப்பட்டார்கள்.

மேற்கு ஜேர்மன் கொம்பனிகள் லிபியாவின் ஆகாயப்படைக்கு ஆகாயத்திலிருந்து விமானங்களுக்கு எண்ணெய் நிரப்பும் தொழில்நுட்பத்தை கற்றுக் கொடுத்தாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இங்கிலாந்தில் ஒரு வருடமாக சட்டவிரோதமாக இருந்தவரும், தமிழ் இயக்கங்களுக்கு உதவி புரிந்தவருமான விஜய் மெண்டிஸ் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

றெனேமோ கெரில்லாக்கள் மொசம்பிக்கிலிருந்து சிம்பாவே நாட்டிற்குள் புகுந்து 6 கிராமங்களை நாசமாக்கியதுடன் பிள்ளைகளையும் கொன்று பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

பங்களாதேசில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்பின் சிறு பிள்ளைகளுக்கு அம்மை, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவியுள்ளன. சத்தான உணவின்மையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரும்புகிறோம். ஆனால் இவை பலாத்காரமாக எங்கள் தொண்டைக்குழியிலிருந்து வெளிவருவதை நாங்கள் விரும்பவில்லை" - பாதிரியார் தியோகுப்பிள்ளை.

"ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து புலிகளை வேட்டையாடிவருகிறது. அவர்களால் புலிகளைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் புலி ஆதரவாளர்களான பொதுமக்களைக் கொல்கிறார்கள்" - யாழ்ப்பாணக் கடைக்காரர் மகாலிங்கம்.

"ஒவ்வொரு நாளும் 4,5 பிரேதங்கள் பாதையில் காணப்படுகின்றன. எப்படி ஈ.பி.ஆர்.எல்.எவ் மக்களிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்க முடியும்? ஒவ்வொரு இரவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும், இந்திய இராணுவமும் தேடுதல் வேட்டையாடுகின்றனர். இவர்கள் சில பொதுமக்களை கொல்வதுடன் தினமும் 30, 40 இளைஞர்களை பிடித்துக் கொண்டு போகின்றனர்." - யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் ஒரு வைத்தியர்.

"எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையுமே நாம் பிடித்து வருகிறோம். ஆனால் இவர்களை நாம் கேள்வி கேட்டு அப்பாவிகளாகத் தெரிபவர்களை விடுதலை செய்கிறோம்" - ஈ.பி.ஆர்.எல்.எவ் பேச்சாளர் சங்கரி.

02.01.89 (வீரகேசரி)

நெடுங்கேணியை அடுத்துள்ள சன்னாசி பரந்தன், மதியாமடு ஆகிய இடங்கள் மீது இரண்டு, மூன்று தினங்களாகத் தாக்குதல் நடத்தப்பட்டதில் பல வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன. 120 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

04.01.89 (வீரகேசரி)

கிரானில் நாகநாதன் என்ற கிராமசேவை உத்தியோகத்தர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியாவில் புளொட் இயக்கமும், புலிகள் இயக்கமும் மோதிக் கொண்டதில் சிவபாலன் உட்பட 5 புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

புத்தளத்தில் முகம்மது அமீர் பாச்சா, கோ.கணேசன் என்ற இருவர் இயக்கத்திலிருந்து விலகியமைக்காக இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் புங்கம்குளம் வீதியைச் சேர்ந்த சமூக ஊழியரான ஆ.முருகையா என்பவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

05.01.89 (வீரகேசரி)

நாவற்குடாவில் கிருஉதனன் என்பவரும், உன்னிச்சையில் பொன்னம்பலம் சிவநாயகம் என்பவரும் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கல்குடாவில் மாணிக்கவாசகம் என்பவர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட ஒரு மாணவனின் நினைவை கொண்டாடுவதற்காக மக்களால் நடாத்தப்பட்ட ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டன. கூட்டமாகக் கூடும் மக்களை பொலிசார் அடித்து விரட்டினர்.

மேற்கு ஜேர்மனியிலிருந்து சட்டவிரோதமாக டென்மார்க் சென்று தஞ்சம் கேட்ட 7 பேர் மறுபடி மே.ஜேர்மன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்கு ஜேர்மனியின் கம்பேர்க் நகரில் 21 யூகோசெலவாக்கிய நாட்டவர் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஜிப்சி இனத்தவர். இவர்களில் ஒருவர் தனக்கும், பிள்ளைகள் இரண்டிற்கும் பெற்றோல் ஊற்றி தீ மூட்ட ஆயத்தமானபோது பொலிசார் தடுத்து நிறுத்தினர். நாட்டிற்கு திருப்பியனுப்பப்பட்டால் சிறைவாசம் கிடைக்குமென அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கெதிராக ஐக்கியநாடுகள் சபையில் லிபியாவும், மற்றும் பல மூன்றும் உலக நாடுகளும் கொண்டுவந்த கண்டனத்தை மூன்றும் முறையாக இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் தங்கள் வாக்குத் தடுப்பு உரிமையைப் பாவித்து நிராகரித்தன. .

தாய்லாந்திலிருந்து 22 பர்மா மாணவர்கள் பர்மாவிற்கு நாடுகடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தில் கொல்லப்பட்ட யூதரின் பிரேதங்கள் தற்போதும் மே.ஜேர்மன் பல்கலைக்கழக பயிற்சிக் கூடங்களில் பரிசோதனைகளுக்காகப் பாவிக்கப்படுவதாக இஸ்ரேலிய அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

வூப்பெற்றால் மரண தேவதை எனப் பெயர் பெற்ற மே.ஜேர்மன் வூப்பெற்றால்நகர வைத்தியசாலையில் பணியாற்றிய ஜேர்மன் தாதிக்கெதிரான வழக்கு ஆரம்பமாகியுள்ளது. இந்தப் பெண்தாதி வயது முதிர்ந்த 17 நோயாளிகளை விச ஊசிபோட்டு கொன்றுள்ளாள். தான் இவர்களை கஷ்டம் தெரியாமல் பரலோகத்திற்கு அனுப்பி வைத்ததாக இவள் தெரிவித்துள்ளாள்.

மே.ஜேர்மனியில் நவநாஸிகள் தங்கள் பிரச்சாரத்தை கொம்பியூற்றர் விளையாட்டுகள் மூலம் அறிமுகப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். இந்த விளையாட்டுகளில் துருக்கியர், வெளிநாட்டவர், கறுப்பர்களை தாக்குதல், துன்புறுத்துதல் போன்றவை சித்தரிக்கப்படுகின்றன.

அவுஸ்திரேலியாவில் சிட்னி கடலில் 17 வயது இளைஞனொருவன் 14 அடி நீளமான சுறாவின் மரணப்பிடியிலிருந்து காயங்களுடன் டொல்பின் மீன் கூட்டங்களால் காப்பாற்றப்பட்டான். டொல்பின் மீன்கள் இந்த இளைஞனைக் காப்பாற்ற நீண்ட நேரமாக சுறாவுடன் சண்டையிட்டுள்ளன.

உலகம் முழுவதும் 35 இலட்சம் மக்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(தொடர்ச்சி 16 ஆம் பக்கத்திலிருந்து)

யப்பட்டுள்ளன. முதலாளித்துவ அரசுகளின் நோக்கமும் இதுவாகவே இருப்ப தனால்தான் இன்று அரசுகளும் மதத்திற்கென்று தனி அமைச்சுகளை உருவாக்கி மதங்களுக்குப் பலம் சேர்த்து தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

அன்று நிலப்பிரபுக்கள் மதங்களின் மூலமாக தொழிலாளர்களைப்பிரித்துள்ள சாதி வேற்றுமைகளை இறுக்கமாக்கி கூலித் தொழிலாளர்களை இழி குலத்தோராக்கி ஆலயப் பிரவேசத்தைத் தடை செய்தார்கள். இழி குலத்தவர்கள் ஒதுக்கப்பட்டோர் என்ற பொய்யான நிலையை உண்டாக்கி அவர்களிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கி தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டார்கள்.

ஏகாதிபத்தியங்களால் இலங்கை கைப்பற்றப்பட்டு கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்ட பின்னர் இந்து மதத்தால் ஒதுக்கப்பட்ட தொழிலாளர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள். போதுமானளவு ஆட்கள் சேர்ந்தபின் கிறிஸ்தவ ஆலயங்களிலும் உயர்சாதி, தாழ்ந்த சாதிகளுக்கென இரு பிரிவுகள் உண்டாக்கப்பட்டன. இதன்பின் மதமாற்றம் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் கிறிஸ்தவ மதத்தோர் தாழ்ந்த சாதியினரே ஏனக் கணிக்கப்பட்டு மதத்தின் பெயரால் மறுபடியும் அவர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலிருந்து தற்போதைய முதலாளித்துவ அமைப்புக்கு மாறியபோது மதங்களும் புதிய வடிவம் அமைத்துக் கொண்டன. மதங்களின் பெயரால் பல ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. மதங்களிலும் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. முதலாளிகளும், அரசாங்கங்களும் நிதி உதவியிலிருந்து முழு ஒத்துழைப்பையும் இவற்றிற்கு வழங்கினர்கள். முன்பு நிலப்பிரபுக்கள் செய்த அதே நடவடிக்கைகளை தற்போது மத ஸ்தாபனங்கள் புதிய வடிவில் செய்து வருகின்றன. முதலாளிகளினாலும், அரசுகளினாலும் ஏமாற்றப்பட்டு, சுரண்டப்பட்டு தமது உழைப்பைப் பறிகொடுத்துவிட்டு வெறும் கையுடன் இருக்கும் உழைப்பாளிகளுக்கு, அவர்கள் தங்களுடைய அடிமை நிலையை உணராமல், அதே நிலையில் தொடர்ந்தும் இருப்பதற்காக இந்த மத ஸ்தாபனங்களால் 'கருணை உதவிகள்' வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் அப்போதைய பட்டினியிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள். ஆனால் தங்களுடைய அடிமை நிலையிலிருந்து நிரந்தரமாக மீள்வதில்லை.

இன்றைய அரசுகள் அனைத்து மதங்களையும் ஊக்குவித்து மக்களை மதங்களின் பெயரால் பிரித்து மோதவிடுகின்றன. இதனால் அரசுக்கெதிரான மக்களின் ஒன்றிணைந்த போராட்டம் திசை திருப்பப்பட்டு மதக்கலவரங்கள் தூண்டப்படுகின்றன. சாதிக் கலவரங்கள் தூண்டப்படுகின்றன.

இப்படிச் சாதிப் பிரிவினை, பெண்ணடிமை என்பவற்றைப் பேணி

www.tamilarangam.net

ஒடுக்கப்பட்டு,சுரண்டப்பட்டு வரும் மக்கள் தங்களுடைய அடிமை நிலையை உணராமல் ஒருவித மாயை நிலையில் இருப்பதற்காகவே மதங்கள் ஒடுக்குமுறையாளர்களால் உருவாக்கப்பட்டன,தொடர்ந்து பாதுகாக்கப்படுகின்றன என்பதை முதலில் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.இந்த இனம் காணுதலின் மூலம் மதம் என்ற மாயையிலிருந்து விடுபட்டு எங்களை சுரண்டும்,ஒடுக்கும் எதிரிகளை இனம் கண்டு,அவர்களை எதிர்த்துப் போரிட்டு, அவர்களது கையிலிருக்கும் அதிகாரத்தைப் பறித்தெடுத்து வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உண்டாக்க வேண்டும்.அப்போதுதான் அனைத்து மக்களுக்கும் உண்மையான விடிவு கிடைக்கும்.அதை விடுத்து 'விதி' என்றும்,'பாவம்' என்றும் மதங்களால் எங்களைச் சுற்றிக் கட்டுப்போட்டுக் கொண்டால் எமது அடிமை நிலை,சுரண்டப்படும் நிலை ஒருபோதும் மாறவே மாட்டாது.

---



"... ஆனல் மகனே நிச்சயமாக இது சாப்பிடுவதற்காக அல்ல"

www.tamilarangam.net

# கானல் வரி

மறுபடியும்
எல்லோரும் வந்தாயிற்று.
மாமா, சித்தப்பா
மணியக்கா
அண்ணாந்து சாய்ந்தபடி
அப்பா கதிரைக்குள்.

சுருட்டுப் புகை கிளப்பும்
மார்பு மயிர்க் காட்டில்
மேய்கிற விரல்கள்.

மறுபடியும்
காணி உறுதிகள்.
கூறைச் சேலையுடன்
உறங்கி உறங்கி
அதற்கும் தொற்றிய
நப்தலீன் வாசனை

சரசா எனது அருமைச் சரசா

நீ என்ன செய்வாய்?
அவர்களோ உள்ளே
உனது விலைக்குப் பேரம் பேசுவர்.

மகிழம் பூ சிந்தியிருக்கும்.
தண்ணீர் ஊற்றவும்
பாலாய் நெளிகிற நிலவில்
இரவு.
குந்தியிருப்பாய் கிணற்றுக் கட்டில்
கண்களை மூடி, கற்களை எறிந்து
குருட்டுச் சாத்திரம்
பார்த்தபடியே

'இம் முறையேனும் ... '

காத்திரு.
உனக்காய் இவர்களனைவரும்
கொண்டு வருவார்
ஏழு குதிரைகள் பூட்டியதேரில்
பொன்னிற இறகுகள்
தலையில் மினுங்கும்
'தூய க்ஷத்திரியனை'

பார்த்திரு.
உனது கூந்தல் வெளுத்த
பின்பும் கூட.

சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

தூண்டில் கலம் 12இல் 'வர்க்கப் போராட்டத்தின் விளைவாய் உருவான சர்வாதிகாரமும் அங்கு நாம் கான முடியாதவையும்' என்ற கட்டுரை வெளியாகியிருந்தது. யதார்த்தமாக மக்கள் வாழுகின்ற சூழ்நிலைகளிலிருந்து விலகி ஒதுங்கிக்கொண்டு சித்தாந்த நூல்களால் மட்டும் தங்களுக்கென ஒரு கூடு கட்டிக் கொண்டு அதி தீவிர இடதுசாரித்தனமாக எழுதும் பிடல் போன்றவர்களைப் பார்க்கும்போது, யதார்த்தமாக மக்கள் வாழும் சூழ்நிலைகளிலிருந்து ஒதுங்கியிருந்து வேதத்தை மாத்திரம் கட்டிக் கொண்டு அழுத வேதியர்களின் ஞாபகம்தான் வருகிறது.

மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு முறையை மாற்றியமைக்க மனிதத் தன்மையுடன் எழுந்த அணுகுமுறையே மாக்ஸியமாகும். இந்த அணுகுமுறையை வெவ்வேறு சமூக அமைப்புகளில் பிரயோகிப்பவனே மாக்ஸியவாதி. எமது குறிக்கோள் வர்க்க பேதமற்ற சர்வாதிகாரத்தை உருவாக்குவதாகவே இருக்கும்போது, மக்களை அவ்வழிக்கு இட்டுச் செல்வதற்காக அவர்கள் அவ்வப்போதுள்ள அரசியல், சமூக சூழ்நிலைகளுக்கமைய அவர்களால் விளங்கிக் கொள்ளக் கூடிய அரசியற் செயற்பாடுகளுடனேயே அவர்களை சமூக மாற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். தெருக்களில் கைகள் கட்டப்பட்டு பெற்றோல் ஊற்றி இளைஞர்கள் கொளுத்தப்படுகிறார்கள். மனித நாகரிகமே வெட்கித் தலைகுனியும் வகையில் சித்திரவதைகள், மின்கம்பத்தண்டனைகள்... தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலையில் அனைத்தையும் துவக்குகளே தீர்மானிக்கின்றன. பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், வெகுஜன ஸ்தாபனங்கள் இயங்கும் உரிமை, தொழிற் சங்கச் சுதந்திரம் இவற்றுடன் சேர்ந்து மனிதாபிமானமும் மறுக்கப்படுகிறது. காணாமற் போனவர் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. வாழ்ந்து கொண்டிருக்கும்போதே வாழ்க்கை பறிபோய்விடுகிறது. இந்த நிலையில் மறைந்துகொண்டிருக்கும் மனிதத்தைத் தேடுவதும், மக்களை துணிவுடன் கேட்கச் சொல்வதும் அதை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவதும் மக்களைச் சார்ந்திருக்கும் யதார்த்தமான அரசியலாகும். 'பட்டினியுடன் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு கடவுள் சோறு மூலமாகத்தான் காட்சி தர முடியும்' என்பது போல அடிப்படை ஜனநாயக உரிமைகளையே இழந்து நிற்கும் மக்களிடம் புரட்சி முதலில் 'மனிதம் எங்கே?' என்று கேட்டுக் கொண்டுதான் வர முடியும். வெறும் குரோத உணர்வுகளே மேலாதிக்கம் செலுத்தும் இன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றைய நாட்களில் 'வர்க்க உணர்வு' மீட்கப்படாமல், ஒழுங்குபடுத்தப்படாமல் வர்க்கப் போராட்டம் எப்படி சாத்தியமாகும்? மனிதத்துவம் மரணித்துப் போன ஒரு சூழ்நிலையில் மனிதாபிமானத்தினடிப்படையில் தோன்றும் வர்க்கப் போராட்டத்தை எதிர்பார்ப்பது விபரீதமான கற்பனையாகும். நாம் சித்தாந்தங்களைப் படித்தவர்கள் என்பதற்காக ஒவ்வொரு பிரச்சினை எழும்போதும் அதை ஒப்பிப்பது இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது.

ஸ்ருட்காட் காளிதாஸ்

மதவெறி என்ற தலையங்கம் கொண்ட கட்டுரையைப் படித்தேன். அதில் இரண்டாம், மூன்றாம் பந்தியில் ஒரு தாயைப் பற்றியும், தந்தையைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வேதனைக்குரிய விசயம். காரணம் எந்த மதத்திலும் ஒரு குழந்தை சாத்தானுக்குச் சமமானது என்று சொல்லப்படவில்லை. மதத்தின் வெறித்தனத்தை மக்களுக்கு காட்டுவதற்காக ஆதாரமாகப் புகுத்தப்பட்ட கற்பனையா? உண்மையா? என்று தெரியவில்லை. தந்தை பற்றிய சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்பது பற்றி ஆசிரியர் குறிப்பிடத் தவறிவிட்டார். அது மட்டுமல்ல இந்தக் கொலைபாதகர்கள்தான் உண்மையான பக்தர்களென கொலைக்குக் காரணமான மதங்கள் பாராட்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மதங்கள் இருந்ததாகவோ, இருப்பதாகவோ இதுவரை கேள்விப்பட்டது கிடையாது.

கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்பது போலாகக் கூடாது. தாய், தந்தையர்களால் கொலை செய்யப்பட்ட குழந்தைகளைப் பற்றி இந்த நாட்டில் மட்டுமல்ல, எங்கள் நாட்டிலும் கண்டும், கேட்டும் இருக்கிறோம். ஆனால் என்ன விதமான நோயால் பீடிக்கப்பட்டு இப்படியான காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை ஆராயாமல் மதவெறி காரணம் என்று கூறுவது முற்றிலும் ஏற்கத்தக்கதல்ல. மதப் பிரச்சாரமோ, மத மாற்றமோ செய்ய போதகர்கள் மக்களிடம் போகிறார்கள் என்பது உண்மையே. அது அவரவர் விசுவாசத்திற்கிணங்க, தங்கள் தங்கள் மதங்களில் கூறப்படும் வேத சூட்சுமங்களை மற்றவர்களுக்குச் சொல்லி விளங்க வைக்கப் போகலாமல்லவா? இதனால் மக்களின் அறிவைப் பொசுக்கி அறியாமை வளர்க்கத் தெண்டிக்கிறார்கள் என்பது சாத்தியமாகுமா?

ஒரு அகதிக் குடும்பத்துக்கு மனிதாபிமான ரீதியில் ஏதும் உதவி செய்ய இப்படிப்பட்டவர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதே போன்று தங்களுக்கும் கிடையாதா? என்று ஏம்பலித்து, தாங்களும் அந்த மதச் சார்பில் ஐக்கியம் கொண்டவர்களாக பாசாங்கு செய்யும் மக்களே இத்தகைய கதைகளை கட்டிவிடலாமல்லவா?

நொயள்ரூட சிவப்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதவெறி என்ற ஆசிரியர் குறிப்பு வரவேற்கக் கூடியது. எனினும் கட்டுரை ஆழமானதாக இருக்கவில்லை. மேலோட்டமாவே எழுதப்பட்டுள்ளது. மதங்கள் மனிதர்களின் உணர்ச்சிகளை எப்படி மழுங்கடிக்கின்றன என்பதைப் பற்றியும், அரசாங்கங்கள் மதங்களை எப்படி பாதுகாக்கின்றன என்பதைப் பற்றியும் இன்னும் விரிவாக எழுதியிருக்கலாம். 'சுதந்திரக் குரல்' என்ற கட்டுரையில் உண்மைகளைக் குறிப்பிட்டிருந்தாலும் தத்துவக் கட்டுரை போல் அமைந்திருப்பதால் கட்டுரையாளர் எதிர்பார்க்கும் உணர்ச்சி வாசிப்பவர்களிடம் வராது. 'நெஞ்சமே மாறிவிடு' பழைய அரசியல்வாதிகளையே குறிப்பிட்டாலும் வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகுகூட பொருத்தமாயிருக்கும். 14ஆம் பக்கத்தில் 3ஆம் பந்தியிலிருந்து 15ஆம் பக்கம் வரையிலான கவிதைப் பகுதியைத் தவிர்த்திருக்கலாம்.

'மாக்சிசம் ஒரு சமூக விஞ்ஞானம்' கட்டுரையை எழுதியவர் விளங்கக் கூடியதாகவே இதை எழுதியிருக்கிறேன் என்று குறிப்பிட்டாலும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது. இப்படி பந்தி பந்தியாக எழுதிக் குவித்தால் பலர் படிக்காமலே விட்டுவிடுவார்கள். எனவே படிப்பவர்களுக்கு சுவாரசியமாக இருக்கும் வகையிலும், இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையிலும் கேள்வி—பதில் வடிவிலோ அல்லது இருவர் உரையாடுவது போலவோ அமைக்கப்பட்டால் பயனுள்ளதாயிருக்கும். அட்டைப்படத்துக்கான சிவத்தின் கருத்துக்குப் பாராட்டுகள்.

லூப்பெற்றால் த. வாசகர்

சரியான இரை கிடையாது வாடி, வதங்கி, ஒதுங்கி இருந்த என்னை சத்துள்ள உணவுடன் வந்த தூண்டில் ஆட்கொண்டுவிட்டது.

கோர்சன்ஸ் (டென்மார்க்) வி. சிறிகதிர்காமநாதன்

கலம் 13இன் அட்டைப்படம், ஆசிரியர் தலையங்கம் ஆகியவை பிரமாதமாக இருந்தன. மதவெறி கட்டுரையில் குறிப்பிட்ட சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சென்று பேட்டி கண்டு வெளியிட்டால் என்ன? ப. வி. சிறீரங்கன் எழுதும் கட்டுரைகளில் இந்தியச் சஞ்சிகைகளை வாசித்த பாதிப்புத் தெரிகிறது. இவருடைய கட்டுரையில் வரும் 'விறலி' என்ற சொல், நெஞ்சமே மாறிவிடு' கவிதையில் வரும் 'மாக்கள்' போன்ற சொற்கள் தமிழ் — தமிழ் அகராதி இல்லாத வாசகர்களை குழப்பிவிடும். அல்அரனின் கவிதையும், கருப் பொருளும் நன்றாக இருந்தன. தூண்டிலில் வரும் எழுத்துப் பிழைகளைப்பற்றிக் கவனமெடுக்க வேண்டும். கோவை றைதனின் சிறுகதைக்கு காலந் தாழ்த்திய பாராட்டுகள்.

காடெக்ஸன் எம். கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரி நட்சத்திரங்கள்

— அம்பலவன்புவனேந்திரன்.

மாரி கோடை என்று
காலம் மாறுகிறது — இந்த
மனிதன் மட்டும்
ஏன் மாற மறுக்கிறான் .. ?

பணத்தை எண்ணுவதில்
குறியாக இருக்குமிவன் — ஏனோ
தாயகத்தை எண்ணிப் பார்க்க
தவறிப் போய்விடுகிறான் .. ?

குழந்தைக்குப் பிறந்தநாள் —
குடி கூத்து கும்மாளம் ..
கொண்டாட்டங்களுக்கு அளவில்லை.
இன்று ஐரோப்பியத் தமிழரின்
அன்றாடக் கடமைகளில் ஒன்று ..
இன்னும் சொன்னால்,
'வீரகேசரி'யில் விளம்பரம்
வீடியோ படப்பிடிப்பு
வீட்டுக்கு வீடு
தமிழ் கொம்பியூட்டரின்
தரமுயர்ந்த 'கார்ட்' ..

அங்கே,
வீட்டுக்கு வீடு மரணவோலம் ..
வீதிகளில் பிணக் குவியல்
நாதியற்றுக் குழந்தைகள்
நாய்களை விடக் கேவலமாய் ..

ஏ தமிழா
எண்ணிப்பார் நம் இனத்தை ..

கல்யாண வீடென்றால்
கலகலப்பே தனி

www.tamilarangam.net

எல்லாமே நம் நாட்டோடு சரி ..
இல்லை .. இல்லை,
இங்கும் பன்மடங்கு
கொள்ளையாய் செலவழித்து
கொண்டாட்டம் நடாத்துகிறார் ..
சீதனம் கூடச் 'சிலோனிலிருந்து'
'சிக்னர்' அடித்து
சீமைக்கும் வந்துவிட்டது ..

சீ தமிழா
உன்னைத் திருத்த முடியாதா?
உன்னோடு சமமாய்
அகதிப் பணம் பெறுபவனிடமா?
சிந்தித்துப் பார் ..
நீ பிறந்த மண்ணையும்
நிமிர்ந்து நடந்து வந்த வழியையும் ..

அங்கே, ...
உடுத்த துணியின்றி
குடிக்க கூழின்றி
குடியிருக்க வீடின்றி
அகதிகளாய் நம் ரத்தங்கள்

இங்கே,
அகதி - என்ற பெயரை
நீயே உனக்குச் சூட்டிக் கொண்டு
உடுத்தியிருப்பது 'பனாரஸா?' -
'காஞ்சிபுரமா?' என்று
அறைகளிலிருந்து கதையளக்கிறாய் ..

சிறைகளில் சித்திரவதையுடன்
அங்கே நம் சகோதரங்கள்
சின்னாபின்னமாக்கப்படுவதை
சற்றுச் சிந்தித்துப் பார் ..

'கவுன்' அணிந்தாலே
கற்புக்குப் பங்கம் என்று
கலங்கிப் புடவை கட்டிப்
பூவும் பொட்டுமாய் சிறுமிகள்
அங்கே அஞ்சியிருக்க

www.tamilarangam.net

இங்கே,
'பவுன்' என்ன விலை
'சவுதியா', 'சிங்கப்பூரா' என்று
சந்தை நடாத்தி
சல்லி சேர்க்கிறாய் ..
சற்றுச் சிந்தித்துப் பார் —
வெற்று வயிற்றோடு
வேகுகின்ற நம் ரத்த உறவுகள்
சத்தமிடுவது — இந்த
வற்றாத கடல்களையும் தாண்டி,
வசதியுடன் வாழ்கின்ற
உன் காதுகளுக்கு கேட்கவில்லையா?
உற்றுக் கேட்டுப் பார் ..
உனக்கும் கேட்கும்.


பிள்ளைக்குச் 'சடங்கு' செய்ததில்
அவ்வளவு வருமானமில்லை — என்று
பிதற்றுகின்ற பெற்றோரே
நீங்கள் 'வேறு' மார்க்கமாக
வேதனம் பெறலாமே
கொள்ளை கொள்ளையாக
பணம் கொட்டுமே

இப்படிப் பேசுவதற்கு
உங்களுக்கு வெட்கமில்லை ..
பணமென்றால் — நீ
நாயாக அலைகிறாயே

அங்கே,
தெருவினிலே
பிணங்களை நாய்கள்
தின்னுகிறதே
நம் உறவுகள் தினமும்
உயிருக்குப் போராடுவதை
உணர மறந்தாயே தமிழா
உனக்கு ஆடம்பரம் தேவையா?
இன்று சுகபோகம் அனுபவிப்பாய்
நாளை .. ?

எப்படியும் தமிழருக்கு
ஒரு விடிவு வரும்.
அப்போது வேசதாரிகளுக்கும்
ஒரு முடிவு வரும்.

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

**- பார்த்திபன்**

பதிவுத் தபாலில் கடிதத்தை அனுப்பிவிட்டு தபாற் கந்தோரை விட்டு முத்து வெளியே வந்தான். வெளியே அலைந்து கொண்டிருந்த குளிர் உடனடியாக அவனைத் தாக்கியது. கைகள் தன்னிச்சையாக ஜக்கற் பொக்கற்றினுள் தஞ்சம் கேட்க, கால்கள் துரிதமாக இயங்கின. மாலையாக இருக்க வேண்டிய நேரத்தை ஆரம்ப இருட்டு குழப்ப ஆரம்பித்திருந்தது.

கைதூன் உள்ள அலுவலகங்களில் சுழல் கதிரையில் அமர்ந்து கோப்புகளில் மூழ்கியிருந்தவர்கள் ஆயாசப் பெருமூச்சுடன் வீட்டுக்கு வர, எதிர்ப்பால் நண்பர்களைத் தேடி இளசுகள் போய்க் கொண்டிருக்க, பாதையில் வாகனங்கள் அதிகரித்து நெரிசல் உண்டாகியிருந்தது. குடும்பகாரர்கள் அல்டி, கோப்புக்குள் மெல்லியதாகப் போய், பிறகு பாரமாக வெளிப்பட்டார்கள்.

முத்து கொஞ்ச நேரம் நின்று வேடிக்கை பார்த்துவிட்டு குளிர் பயமுறுத்த வசிப்பிடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

பற்களைப் பற்றிக் கவலைப்படாத சிறுவர்கள் சக்கரப் பலகையில் சாகசம் செய்து கொண்டிருந்தார்கள். இரண்டொரு நாய்கள் எஜமானர்களிடம் கழுத்துப்பட்டியின் முனையைப் பாரம் கொடுத்து விட்டு குறிக்கப்பட்ட எல்லைக்குள் 'சுதந்திரமாக' உலாவின.

தொடர்கதை 38



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தடியான பகுதியிலிருந்து அமைதியான கட்டிடப் பிரதேசத்திற்குள் முத்து பிரவேசித்தான். பெரும்பாலான கட்டிடங்கள் காலநிலையால் இறுக்கமாக மூடியிருந்தன. பலர் கரியைச் சிக்கனப்படுத்தியிருந்ததால் மேலே புகைக்கவில்லை.

ஓரளவு இருட்டான பகுதியிலிருந்து பியர் குடித்துக் கொண்டிருந்த நான்கைந்து பேரை முத்து தாண்டியபோது அவர்கள் கவனம் அவனை நோக்கித் திரும்பியது.

"சுவாற்சன் றவுஸ்" (கறுப்பனே வெளியேறு)

"சுவாற்ச சுவைன" (கறுப்புப் பன்றி)

"அவுஸ்லாண்டர் றவுஸ்" (அந்நியனே வெளியேறு)

பியர் வாடையுடன் கோசங்கள் வெளிக் கிளம்பின. முத்து அவர்களைக் கணிப்பிட்டான். ஐந்து பேர். கலோரி கூடிய முரட்டு உருவங்கள். கையில் போத்தல்கள் வைத்திருந்தார்கள். இந் நிலைமையில் தப்பித்தலே உசிதமானது.

முத்து நடையை விரைவாக்கினான். ஓடும் எண்ணத்தைத் தன்மானம் கேலி செய்தது.

அவர்களும் பின்னால் வந்தார்கள்.

"சுவைன குண்ட்" (பன்றி நாய்?)

"சுவைன அசைலன்றன்" (பன்றி அகதி?)

"ஆஉஸ்லொக்" (தமிழாக்கம் வேண்டாம்)

"தூ" என்று அவர்களில் ஒருவன் துப்பியது தன்னுடைய ஜக்கற் பின்பக்கத்தில் படிந்திருக்கலாம் என முத்து ஊகித்தான். அண்மையில்தான் வருகிறார்கள். முரட்டு உடம்புகள். கையில் போத்தல்களும் வைத்திருந்தார்கள்.

பயம் முதன் முதலாக உற்பத்தியாக முத்து நடையை இன்னும் விரைவுபடுத்தினான்.

'கிளிங்'

பியர் போத்தலொன்று முத்துவுக்கு மிக அண்மியதாக விழுந்து உடைந்தது. எச்சரிக்கை. முத்து இப்போது ஓட ஆரம்பித்தான்.

தலையை மழுங்கடித்து, கறுப்பு ஜக்கற், கறுப்பு ஜீன்ஸ் அணிந்து இராணுவச் சப்பாத்து போட்டிருந்த அவர்கள் கைகளை நேராக நீட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கே கிற்லர்' என்று சொல்லி டொச்சில் பழைய பாட்டுப் பாடினார்கள்.

தனது கட்டிடத்திற்கு வரும்வரை முத்து ஓட்டத்தை நிறுத்தவில்லை.குளிரைப் பொருட்படுத்தாமல் ஜின்னலைத் திறந்து, எதிர் கட்டிடமாடியில் ஜன்னல் துடைத்துக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் முத்து ஓடிவருவதைப் பார்த்துவிட்டான்.

"என்ன முத்து ஒலிம்பிக் திருப்பி நடத்தப் போறுங்களோ?"

அவனுடைய கேள்வியை அலட்சியம் செய்து, பிரதான கதவைத் திறந்து கட்டிடத்திற்குள் பிரவேசித்த பின்தான் முத்துவால் நிதானமாக மூச்சுவிட முடிந்தது.உடம்பு முழுக்க வியர்த்திருந்தது.ஜக்கற்றை சர்ரென்று பிரித்து உடம்பைக் காற்றுக்குக் காட்டினன்.சுவாசம் மெல்ல மெல்ல சகச நிலைக்கு வந்தது.

படிகளில் ஏறி தனது அறைக் கதவைத் திறந்து பிரவேசித்தான். குளியலறைக்குள் நின்று டெனிமிலிருந்து நீலத்தை வெளியேற்றிக் கொண்டிருந்த ஞானம் முத்துவின் தோற்றத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

"என்னடாப்பா களைச்சுப் போய் வாறுய்? பஸ்ஸுக்குப் பின்னுல ஓடிவந்தனியே?"

"பகிடி விடாதை.நாசிக்காறங்கள் கலைச்சுக் கொண்டு வந்தவங்கள்"

"நாசிக்காறங்களோ? எங்கட ஸ்ரட்டுக்கயும் வந்திட்டாங்களே" ஞானம் இரண்டாம் முறை தண்ணீரில் அமுக்கி எடுத்துப் பிழிந்தான்.

"வந்திட்டாங்களோ? ஆரிலயேன் கைவைச்சாப் பிறகுதான் உங்களுக்குத் தெரியவரும்" முத்து அறைக்குள் போய் ஜக்கற், ஜீன்ஸிலிருந்து விடுதலையடைந்து சாரத்துக்கு மாறினன்.

"எங்கயோ ஒரு ஸ்ரட்டில எங்கட ஆக்களின்ரை பில்டிங்கை எரிச்சவங்கள் என்டு கேள்விப்பட்டனன்.இப்ப எங்கட ஸ்ரட்டுக்கயும் வந்திட்டாங்கள் என்டா கரைச்சல்தான்" ஞானம் பிழிந்த உடைகளை உலர்த்துவதற்காக கட்டிட உச்சிக்குப் போனுன்.

முத்துவுக்கு எரிச்சலாக இருந்தது. 'நாட்டில நிம்மதியில்லையென்டு இங்க வந்தா இஞ்சயும் பிரச்சினையாயெல்லோ கிடக்கு.இனி எந்த நாட்டில செக்கண்ட் அசூல் அடிக்கிறது.சைச.உவங்களேன் எங்களில ஆத்திரப்படுறுங்களெண்டு தெரியேல'

'இதில தெரியிறதுக்கு என்ன கிடக்கு? அவங்கள் ரேட்டி நிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் காறில விலத்திக் கொண்டு போறு ஆத்திரம் வராம சிரிப்பே வரும். எங்கட சனத்தால ஜேமனி நாறிப் போச்சு. இனிப் பெட்டியைக் கட்டிக்கொண்டு வெளிக்கிட வேண்டியதுதான். போற போக்கில பில்டிங்கிக்குள்ள வந்து வெளுத்தாலும் வெளுப்பங்கள். 'முத்து தனக்குள் பலவாறு யோசித்த வாறே றிமோட் கொன்ரோலரை எடுத்து தொலைக்காட்சியை உயிராக்கினுன்.

மேற்கு பேர்லின் தேர்தலில் நாஸிக் கட்சி பதினொரு ஆசனங்களைக் கைப்பற்றியதைப்பற்றி ஏனைய கட்சிகள் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தன. வெளிநாட்டவரை துரத்துவோம் என்ற கோரிக்கைக்கு இவ்வளவு ஆதரவா என்று பலர் ஆச்சரியப்பட்டார்கள்.

'கிட்லரின்ரை ஆக்கள் நல்லாத்தான் வளந்து வாறாங்கள். முந்தி செய்த மாதிரி காஸ் விளையாட்டு நடந்தாலும் நடக்கும். இதைவிட எங்கட நாடு பறவாயில்லைப் போல இருக்கு' என்று முத்து எண்ணிக் கொண்டிருக்கும் போது ஞானம் உடைகளை உலர்த்தப் போட்டுவிட்டு வந்தான்.

"என்னடாப்பா தலையில கை வைச்சுக் கொண்டிருக்கிறாய். அவங்கள் கலைச்ச உடன பயந்திட்டியே. ஒண்டுக்கும் யோசியாதை வெல்லுவம். உலையை வையன். இரவுச் சமையலை மெல்ல மெல்லமாத் தொடங்குவோம்" ஞானம் சொல்லிவிட்டு தொலைபேசியை எடுத்து எண்களைச் சுழட்டினுன்.

"கலோ"

" ------ "

"நான் ஞானு கதைக்கிறன். என்ன மாதிரி நாளைக்கு வாறியே?"

" ------ "

"அது பிரச்சினையில்லை. சும்மா கடத்தாம வா. இச்ச ரண்டு நாள் நிண்டு போகலாம்"

" ------ "

"பானெவ்வுக்கு வந்து நிண்டு ரெலிபோனடி. நான் வாறன்"

" ------ "

"அப்ப நாளைக்குச் சந்திப்பம். சூஸ்" என்று ஞானம் இணைப்பைத் துண்டித்தான். "என்ரை பழைய கூட்டாளி. தற்செலா டோற்முண்ட்டில ஆளை ஒருநாள் கண்டன். அடுத்த சனி, ஞாயிறு வாறன் எண்டான். அதுதான் அடிசுய் பாத்தனுன். நாளைக்கு வாறுன்" என்று முத்துவுக்குச் சொன்னுன்.

"ஆரான்?" என்று முத்து கேட்டதற்கு "பார்த்திபன்" என்றுன்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது விமர்சனம்

'கண்ணீர்ப் பூக்கள்' என்ற கவிதையில் பிரிவுத் துயர் மட்டுமே வெளிக்காட்டப்பட்டுள்ளது.

காளிதாஸ் என்ற வாசகர் குறிப்பிட்டபடி 'நாம் சித்தாந்தங்களைப் படித்தவர்கள் என்பதற்காக ஒவ்வொரு பிரச்சினை எழும்போதும் அதை ஒப்பிப்பது இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது' என்பதை விட ' ... சூழ்நிலையைப் புறக்கணித்து அதை ஒப்பிப்பது சரியான கருத்தை அந்நியப்படுத்தும்' என்பதே பொருத்தமானது. மனிதத்துவம் மரணித்துப் போன ஒரு சூழ்நிலையிலிருந்தே மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட வர்க்கப் போராட்டம் தனது அடிப்படையைத் தேடி முனைப்புப் பெறும்.

சிவப்பி என்ற வாசகருக்கான பதில் 'மதம்' என்ற கட்டுரையில் அடங்கியுள்ளது.

---

(செய்திக் குறிப்பின் தொடர்ச்சி)

07.01.88 (வீரகேசரி)
தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிலைய அலுவலரும், அரியாலை பிரஜைகள் குழுச்செயலாளருமான இராசதுரை முருகையா யாழ்ப்பாணத்தில் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

09.01.88 (வீரகேசரி)
அக்கரைப்பற்றில் இயக்கமொன்றைச் சேர்ந்த சங்கர், விசு ஆகியோர் போட்டி இயக்கத்தால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர்.

எட்டியாந்தோட்டைப் பகுதியில் மூர்த்தி என்ற குடும்பஸ்தர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு குற்றுயிராக தீமூட்டிக் கொளுத்தப்பட்டார்.

13.01.88 (வீரகேசரி)
ஐ.ம.வி.மு உறுப்பினர் குமார் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

14.01.88 (வீரகேசரி)
நவசமசமாஜக் கட்சியின் அரசியற்குழு உறுப்பினரும், வட பிரதேச அமைப்பாளருமான வி. அண்ணாமலை யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

பெப்ரவரி 1989 கலம்: 14

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு........... கடலோடிகள்

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி................ SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL 2
WEST GERMANY
TEL. 0202 507156

பெயர், முகவரி போன்ற முழு விபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது. நீங்கள் விரும்பினால் நீங்கள் குறிப்பிடும் புனை பெயரிலோ, இடத்தைக் குறிப்பிடாமலோ பிரசுரிக்கப்படும். வாசகர் வட்டம் போன்ற அமைப்புகளிலிருந்து அனுப்பும்போது அந்த அமைப்புகளின் சார்பாக ஒருவரின் பெயராவது குறிப்பிடல் வேண்டும்.

விமர்சனங்களை இயலுமானளவு விரைவில் அனுப்புதல் விரும்பத்தக்கது. விமர்சனங்கள் நீளமாக இருப்பின் கருத்துச் சிதையாமல் அவற்றை ஓரளவுக்குச் சுருக்கிப் பிரசுரிக்கும் உரிமையை ஆசிரியர் குழு வாசகர்களின் அனுமதியுடன் எடுத்துக்கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் -- 20 டி.எம்.
1 வருடம் -- 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

## SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்